# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1758/36 - 2012 මැයි 18 වැනි සිකුරාදා - 2012.05.18

*1758/36 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 36 / 49* II.

**பொலிஸ் கட்டளைச் சட்டம்**

(53 ஆம் அத்தியாயமான) பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரின் அங்கீகாரத்துடன் பொலிஸ் மா அதிபரினால் ஆக்கப்பட்ட விதிகள்.

பொலிஸ் மா அதிபர்.

கொழும்பு,
2012, மே 11.

விதிகள்

1. இவ்விதிகள் 2012 ஆம் ஆண்டின் பொலிஸ் (பொலிஸ் நிலையங்களில் சட்டத்தரணிமார் தோன்றுதல்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்விதிகள், (53 ஆம் அத்தியாயமான) பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கும் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன், இலங்கையினுள் அத்தகைய நிலையங்களில் சேவையாற்றுகின்ற எத்தகையதுமான பதவி வரிசையிலுமுள்ள எல்லாப் பொலிஸ் அலுவலர்களினாலும் பின்பற்றப்படுதலும் வேண்டும்.

3. (1) இலங்கையின் ஏதேனும் பாகத்தில் அமைந்துள்ள (53 ஆம் அத்தியாயமான) பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பொலிஸ் நிலையமொன்றின் வளவுகளினுட் பிரவேசிக்கின்ற ஒவ்வொரு சட்டத்தரணியும், சட்டத்தரணியொருவரென்ற அவரது தன்மையில், அத்தகைய சட்டத்தரணியின் கட்சிக்காரராகவுள்ள ஆளொருவரின் அக்கறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக, அன்பாதரவான முறையில் நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அலுவலர்களினால், அவர்களின் பதவி வரிசை எத்தகையதாகவிருப்பினும், நியாயமான முறையிலும் பொறுமையுடனும் விசாரிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஒரு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பொலிஸ் அலுவலரும், தமது கட்சிக்காரராகவுள்ள ஆளொருவரின் அக்கறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய பொலிஸ் நிலையத்தில் சமுகமளித்துள்ள சட்டத்தரணியொருவருடன் கருமங்களைக் கையாளும் போது எந்நேரத்திலும், அத்தகைய சட்டத்தரணியின் மீது உடல்சார் வலோத்காரத்தைப் பிரயோகித்தலோ அல்லது வசைமொழியை அல்லது வேறேதேனும் வகையினதான அச்சுறுத்தும் நடாத்துகையைப் பயன்படுத்துதலோ ஆகாது.

4. மூன்றாம் ஒழுங்குவிதியில் தரப்பட்டுள்ள நோக்கத்துக்காகவும் அச்சூழ்நிலைகளிலும் பொலிஸ் நிலையமொன்றினுட் பிரவேசிக்கின்ற சட்டத்தரணியொருவர், தாம் சட்ட உயர்தொழில் உறுப்பினரொருவரெனத் தம்மை இனங்காட்டும்படி அத்தகைய பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றுகின்ற பொலிஸ் அலுவலரொருவரினால் வேண்டுகோள் விடுக்கப்படின், தாம் சட்ட உயர்தொழில் உறுப்பினரென்ற நிகழ்வை எண்பிப்பதற்கான அடையாள ஆவணங்களாகப் பின்வருவனவற்றைக் காண்பித்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய சட்டத்தரணியின் உயர்தொழில் அத்தகைய சட்டத்தரணியின் தேசிய அடையாள அட்டையில் "சட்டத்தரணி" என இனங்காணப்பட்டிருப்பின், அதனை ; அல்லது

(ஆ) அத்தகைய சட்டத்தரணிக்கு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

5. சமாதானக் குலைவை உட்படுத்துகின்ற ஒரு தவறை அல்லது செயலைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளவரெனச் சந்தேகிக்கப்பட்ட ஆளொருவருடன், அத்தகைய சந்தேகிக்கப்பட்டவரை பொலிஸ் கட்டுக்காப்பில் ஒப்படைக்கும் நோக்கத்துக்காகச் சட்டத்தரணியொருவர் ஒரு பொலிஸ் நிலையத்தினுட் பிரவேசிக்குமிடத்து, அந்நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் சமுகமாகவிருக்கும் பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் அல்லது பதவி வரிசையில் சிரேஷ்ட நிலையிலுள்ள அடுத்த அலுவலரின் கட்டுக்காப்பில் சந்தேசிக்கப்பட்டவரைத் தாம் பொறுப்பிக்கின்றாரென்பதை அவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. இயைபான நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் சமுகமாகவிருக்கும் பொலிஸ் அலுவலரிடம் சட்டத்தரணியொருவர் சந்தேகிக்கப்பட்டவரை ஒப்படைக்குமிடத்து, திகதியையும், நேரத்தையும் அத்தகைய சந்தேகிக்கப்பட்டவரின் இயைபான விவரங்களையும் சொல்லப்பட்ட சட்டத்தரணியின் முன்னிலையில் சந்தேகிக்கப்பட்டவர் ஒப்படைக்கப்பட்டார் என்ற நிகழ்வையும் தகவற் புத்தகத்தில் பதிதல் அத்தகைய பொலிஸ் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

7. பொலிஸ் படையிலுள்ள அலுவலரெவரும், இவ்விதிகளுக்கு முரணான எவையேனும் செயல்களில் ஈடுபடுவதற்கு அதே பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றுகின்ற வேறெவரேனும் பொலிஸ் அலுவலருக்கு உதவுதலோ அல்லது அவருக்கு உடந்தையாகவிருத்தலோ ஆகாது.

8. பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி, தீவுபூராகவும் அமைந்துள்ள எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும் இவ்விதிகளின் பிரதிகள் வழங்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும். பொலிஸ் நிலையங்களில் சேவையாற்றுகின்ற ஒவ்வோர் அலுவலருக்கும் இவ்விதிகளின் பிரதிகளைக் கிடைக்கக்கூடியனவாக்குதலும், இவ்விதிகளின் உள்ளீடு தொடர்பான தகவலைப் பரப்புதலும், இவ்விதிகள் முறையாகவும் கண்டிப்பாகவும் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதலும் அத்தகைய பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்களின் பொறுப்பாதல் வேண்டும்.

9. (அ) பின்வருவோரைக் கொண்டமைந்த நான்கு உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(i) மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவியிலுள்ள சட்டத்துறைத் தலைமையதிபதித் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலரொருவர், அவரே இவ்விசேட குழுவின் பதவி வழித் தவிசாளராகவிருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ;

(iii) இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் சட்டப் பணிப்பாளர் ; அத்துடன்

(iv) தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற உறுப்பினரொருவர்.

(ஆ) விசேட குழுவின் கூட்டங்கள், விடயத்துக்கேற்ப, விசேட குழுவின் தவிசாளரினால் கூட்டப்படுதல் வேண்டும் அல்லது சொல்லப்பட்ட விசேட குழுவின் உறுப்பினரொருவரினால் செய்யப்பட்ட குறித்த வேண்டுகோளின்மேல் கூட்டப்படுதல் வேண்டும் ;

(இ) விசேட குழுவானது, இவ்விதிகளை முறையாகவும் தகுந்த வகையிலும் கடைப்பிடிப்பதனைக் கண்காணிக்கும் மற்றும் வசதிப்படுத்தும் அத்துடன் அதன் எவையேனும் மீறுகைகளைப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடும் பணி பொறுப்பிக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், சட்ட உயர்தொழில் உறுப்பினர்களுக்கும் இலங்கைப் பொலிஸ் படையினருக்கும் இடையே சிறந்த உறவுகளை மேம்படுத்தக்கூடிய மற்றும் வளர்க்கக்கூடிய அத்தகைய எல்லாச் செயல்களையும் பொதுவில் புரிவதற்கான பணி பொறுப்பிக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும் ;

(ஈ) விசேட குழுவானது, இவ்விதிகளின் ஏதேனும் மீறுகை தொடர்பாகவும், சம்பந்தப்பட்ட அத்தகைய பொலிஸ் அலுவலர்களுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல் தொடர்பாகவும் விதப்புரைகளைச் செய்வதற்கும் -

(i) சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும் ;

(ii) பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கும் ;

(iii) தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவுக்கும்

காலத்துக்குக்காலம் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் உரித்துடையதாதலும் வேண்டும்.

10. இவ்விதிகளை மீறுகின்ற பொலிஸ் படையினரின் எவரேனும் அலுவலர் -

(i) பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தண்டிக்கப்படற்பாலவராதல் வேண்டும் ; அத்துடன்

(ii) பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையொன்றுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

6- 219